எண்.13 ஆதி கிருஷ்ணபுரம், கரூர்-1. செல்.9976440222

KVB Karur Vysya Bank
Smart way to bank

THE KARUR VYSYA BANK LIMITED
Registered & Central Office, No. 20, Erode Road,
Vadivel Nagar, L.N.S., Karur – 639002.
[CIN No: L65110TN1916PLC001295]
[e-mail:kvb_sig@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441] [Fax No: 04324-225700]

காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் 101வது வருடாந்திர மகா சபை கூட்ட அறிவிப்பு

நிகழும் 2020 ஆம் வருடம், செப்டம்பர் மாதம் 23ஆம் தேதி, புதன்கிழமை, காலை 11 மணி அளவில் வங்கியின் 101வது வருடாந்திர மகாசபை கூட்டம் காணொளி காட்சி வாயிலாக (Video Conferencing / Other Audio-Visual Means) நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013 மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டும், இந்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகம் (MCA) வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்கியும் சுற்றறிக்கைகள் விவரம்: Ministry of Corporate Affairs (MCA) Circulars No 14/2020 dated 08.04.2020, 17/2020 dated 13.04.2020, 20/2020 dated 05.05.2020). இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR)-ன் படியும் மகா சபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு வருடாந்திர மகாசபை கூட்டம் காணொளிக் காட்சி வாயிலாக நடைபெறும். காணொளி காட்சி வாயிலாக பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு இந்திய நிறுமங்கள் சட்டம் 2013 பிரிவு-103-ன் படி மகா சபை கூட்டத்தில் பங்கேற்க வேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை (Quorum) கணக்கிடப்படும்.

மேற்கண்ட சுற்றறிக்கையின் விவரங்களுக்கு இணங்கவும் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (SEBI) தனது பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகளில் (SEBI LODR) உள்ள வருடாந்திர மகா சபை கூட்டம் தொடர்பான கட்டுப்பாடுகளில் இருந்து சிலவற்றிற்கு கூடுதல் விலக்கு அளித்து வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு (சுற்றறிக்கை விவரம்: SEBI Circular No SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated 12.05.2020) இணங்கவும் வங்கியின் 101வது மகா சபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2019-20 ஆம் நிதி ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையும், மின்னஞ்சல் முகவரியினை வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரி(மோ) (Registrar & Transfer Agent) அல்லது முதலீட்டு பங்கேற்பாளர்களிடமோ (Depository Participant/s) பதிவு செய்து உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், 28.08.2020 அன்று தரவிறக்கம் செய்யப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 31.08.2020 அன்று மின்-அஞ்சல் வழியாக மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வங்கி உறுப்பினர்கள் மகா சபை கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை ஆகியவற்றை வங்கியின் இணைய தளத்திலிருந்தும் (https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/), தேசிய பங்குச் சந்தை (NSE - https://www.nseindia.com) மற்றும் தேசிய பங்குகள் வைப்பு நிறுவனம் (NSDL - https://www.evoting.nsdl.com) ஆகியவற்றின் இணைய தளங்களிலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இதுவரை தங்களது மின் அஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி மின் அஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

(i) பங்குப்பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் (Physical Share certificate holders): வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடம் (i.e., M/s SKDC Consultants Ltd), தங்களது பெயர், பங்கு வரிசை எண். (Folio No), மின் அஞ்சல் முகவரி, அலைபேசி எண், வருமான வரித்துறை அடையாள எண் (PAN) ஆகியவற்றை குறிப்பிட்டு முறையாக கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்தின் மின்னனு நகலுடன் சுயசான்று அளிக்கப்பட்ட வருமானவரி அடையாள அட்டையின் (PAN Card) மின்னனு நகலையும் இணைத்து green@skdc-consultants.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.

(ii) பங்குகளை மின்னனு (Demat Shares) முறையில் வைத்திருக்கும் உறுப்பினர்கள்: மின் அஞ்சல் முகவரியினை தாங்கள் மின்னனு கணக்கு வைத்துள்ள முதலீட்டு பங்கேற்பாளரிடம் (Depository Participant) பதிவு செய்து கொள்ளலாம்.

காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் 101வது வருடாந்திர மகா சபை கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிமுறைகளும், மின்-வாக்களிப்பு முறையினை பயன்படுத்துவது குறித்தான நடைமுறைகளும் (பங்கு பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும்) 101வது வருடாந்திர மகா சபை கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பங்குதாரர்கள் தங்களின் மின்-அஞ்சல் முகவரியினை பதிவு செய்வது குறித்தான நடைமுறைகளும் மகா சபை கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள் 2015-ன் (SEBI LODR), 42வது கட்டுப்பாட்டின் படியும், வங்கியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகம் 17.09.2020 முதல் 23.09.2020 வரை (இரு தேதிகளும் உட்பட) மூடப்பட்டு இருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்திய நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் நிறுமங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தப்பட்ட விதிகள் 2014, விதி என் 20-ன் படியும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR)-ன் 44வது கட்டுப்பாட்டின் படியும் மகா சபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது பங்குகளை பத்திர வடிவிலும், மின்னனு வடிவிலும் வைத்திருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும், தொலைதூர மின்-வாக்களிப்பு மற்றும் மகா சபை கூட்டத்தின் பொழுது மின்-வாக்களிப்பு அளிக்கும் வசதியினை, தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக வங்கி ஏற்பாடு செய்துள்ளது. இந்த வசதியினை பயன்படுத்தி மகா சபை கூட்ட அறிவிப்பில் உள்ள ஏதேனும் ஒருசில தீர்மானங்களுக்கோ அல்லது அனைத்து தீர்மானங்களுக்குமோ வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் (RTA)/முதலீட்டு பங்கேற்பாளர் (Depository Participant) ஆகியோரால் நிர்வகிக்கப்படும் வங்கியின் உறுப்பினர் பதிவேடு (Register of Members) அல்லது உறுப்பினர் உரிமை பதிவேடு (Register of Beneficial Owners) ஆகியவற்றில் 16.09.2020-ம் நாளன்று அலுவல் நேர முடிவில் பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னனு வாக்களிப்பு முறையானது பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும்:

தொலைதூர மின்னனு வாக்களிப்பு	தொடங்கும் நாள் மற்றும் நேரம்	19.09.2020 காலை 10:00 மணி
	முடியும் நாள் மற்றும் நேரம்	22.09.2020 மாலை 05:00 மணி

வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு:

1. தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக நடைபெறும் தொலைதூர மின்-வாக்களிப்பு முறையானது 22.09.2020 அன்று மாலை 5.00 மணியளவில் நிறைவு பெறும். தீர்மானத்தின் மீது ஒருமுறை செலுத்தப்படும் வாக்கு மீண்டும் மாற்றத்தக்கதல்ல.
2. காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்க தகுதி உள்ள ஒரு உறுப்பினர் தொலைதூர மின்-வாக்களிப்பு முறையில் வாக்களித்த பின்பும் மகா சபை கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மகா சபை கூட்ட நாளன்று வாக்களிக்க இயலாது.
3. காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகா சபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில், தொலைதூர மின்-வாக்களிப்பு முறையினை பயன்படுத்தி தீர்மானங்கள் மீது வாக்களிக்காத உறுப்பினர்கள் மட்டுமே மகா சபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்-வாக்களிப்பு முறையில் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.
4. காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகா சபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மகா சபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி மகா சபை கூட்டம் தொடங்குவதற்கு முப்பது நிமிடங்கள் முன்னதாக தங்களை இணைத்துக் கொள்ளலாம். காணொளி காட்சி வாயிலாக மகா சபைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் இணைந்து கொள்ளும் வசதியானது முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்படும்.
5. மகா சபை கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளுக்கும் மகா சபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியலை இறுதி செய்யும் நாளான 16.09.2020-ம் நாளன்று அலுவல் நேர முடிவுக்கும் இடையில் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலமாக உறுப்பினராக உள்ளவர்கள், தொலைதூர மின்-வாக்களிப்பு முறையில் வாக்களிப்பதற்கான பயனர் பெயரையும் (Login ID), கடவுச் சொல்லையும் (Password), kvb_sig@kvbmail.com அல்லது info@skdc-consultants.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம். மகா சபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியலை இறுதி செய்யும் நாளான 16.09.2020-ம் நாளன்று உறுப்பினராக அல்லாதவர்களுக்கு மகா சபை கூட்ட அறிவிப்பு என்பது ஒரு தகவலுக்காக மட்டுமே.
6. மகா சபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு நடைமுறையானது வெளிப்படைத்தன்மையுடனும் உண்மையாகவும் நடப்பதற்கு ஏதுவாக திரு. ஆர்.கே. பாபுலால், (FCS No. 5893), M/s. பாபுலால் யாசர் & அசோசியேட்ஸ் அவர்களை பரிசீலனை அதிகாரியாக வங்கியின் இயக்குநரவை நியமித்துள்ளது.
7. பயனர் பெயர் (Login ID), கடவுச் சொல் (Password) உள்ளிட்ட மின்-வாக்களிப்பு முறை தொடர்பான தகவல்கள் மற்றும் வழிமுறைகள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபை கூட்டத்தில் இணைவதற்கு அதே பயனர் பெயரையும் (Login ID), கடவுச் சொல்லையும் (Password) உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.
8. தொலைதூர மின்னனு வாக்களிப்பு முறை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் உறுப்பினர்கள், திரு. விஸ்வா சாய் Y, மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி, முதலீட்டாளர்கள் தொடர்பு பிரிவு (Investor Relations Cell), எண்:20, ஈரோடு சாலை, வடிவேல் நகர், எல்.என்.எஸ்., கரூர் - 639 002 (தொலைபேசி எண்: 04324-269431; மின்னஞ்சல்: kvb_sig@kvbmail.com) அவர்களையோ அல்லது திரு. ஜெய குமார். K, மேலாளர், M/s SKDC Consultants Ltd, பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர், யூனிட்: கரூர் வைஸ்யா வங்கி 1391/A-1, 3வது தளம், கணபதி டவர்ஸ், கணபதி, கோயமுத்தூர் - 641006 (தொலைபேசி எண்: 0422 - 2539835, 836; மின்னஞ்சல்: info@skdc-consultants.com) அவர்களையோ தொடர்பு கொள்ளலாம்.
9. மின்னனு-வாக்களிப்பு தொடர்பான மேலும் ஏதேனும் சந்தேகங்கள் மற்றும் குறைகள் இருப்பின் உறுப்பினர்கள், Ms. Pallavi Mhatre, Manager, NSDL, 4th Floor, 'A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai - 400 013. Tel: 1800 222 990 / 91 22 24994545, evoting@nsdl.co.in என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

இடம் : கரூர்
தேதி : 31.08.2020

தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்
ஸ்ரீனிவாச ராவ் .M
நிறுமச் செயலர்